RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 141 | மே.29 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# மாநிலங்களுக்கு இடையேயான தண்ணீர் தகராறுகளைத் தீர்க்க வேண்டும்: பிரதமர் மோடி வலியுறுத்தல்



புதுடில்லி: மே.29-

மாநிலங்களுக்கு இடையேயான தண்ணீர் தகராறுகளைத் தீர்க்க வேண்டும் என பிரதமர் மோடி வலியுறுத்தி உள்ளார்.

பிரகதி என்பது இந்திய அரசால் 2015ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு ஒருங்கிணைந்த, பல்நோக்கு நிர்வாகத் தளமாகும். இக்கூட்டத்திற்குப் பிரதமர் தலைமை தாங்கினார். வீடியோ கான்பரன்ஸ் மூலம் மத்திய அரசின் செயலாளர்கள் மற்றும் மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களுடன் நேரடியாக ஆலோசனை நடத்தினார்.

இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி ஒன்பது மாநிலங்களை உள்ளடக்கிய, ரூ. 30,000 கோடி மதிப்பிலான ரயில்வே, மின்சாரம் மற்றும் சாலைத் துறைகளைச் சார்ந்த ஏழு முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்ட நிலையில், திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்படும் தாமதம் செலவு அதிகரிப்புக்கு வழிவகுப்பது மட்டுமல்லாமல், அத்தியாவசிய வசதிகளை உரிய நேரத்தில் பெறுவதிலிருந்தும் மக்களை அது தடுக்கிறது என்று தெரிவித்தார்.

மேலும், மாநிலங்களுக்கு இடையேயான தண்ணீர் தகராறுகளை சரி செய்வதும், உரிய நேரத்தில் அனுமதி வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் தீர்க்குமாறு மாநிலங்களை பிரதமர் மோடி கேட்டுக் கொண்டார்.

## "நாங்கள் அண்ணன் தம்பி போல் ஒற்றுமையாக இருக்கிறோம்" : எஸ்.பி. வேலுமணி

கோவை: மே.29-

"அண்ணன் தம்பி போல நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம். எங்களின் கருத்து வேறுபாடுகள் களையப்பட்டது. சி.வி.சண்முகத்தின் கருத்தும் எங்கள் கருத்தும் வெவ்வேறு அல்ல" என அதிமுக எம்எல்ஏ எஸ்.பி. வேலுமணி தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய எஸ்.பி.வேலுமணி, "வாக்களித்த மக்களுக்கும், என்னை வெற்றியடைய வைக்க உழைத்த மக்களுக்கும் நன்றி. அதிமுக எங்களின் உயிர் மூச்சு; நாங்கள் பதவிக்காக தவெகவை ஆதரிக்கவில்லை, இதனை ஆளுங்கட்சியும் தெளிவுப்படுத்தியது. எப்போதுமே எங்கள் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தான். தோல்விக்கு பின்னர் ஆராய்ந்து செயல்பட வேண்டும் என்று தான் நாங்கள் கோரிக்கை வைத்தோம்.

அதிமுக பொன்விழா கண்ட கட்சி, 31 ஆண்டுகள் ஆளுங்கட்சியாக இருந்தது. ஒரு சில பத்திரிகைகள் தவறாக சித்தரிக்கிறார்கள். எங்களின் கருத்து வேறுபாடுகள் களையப்பட்டுள்ளது.



அண்ணன் தம்பி போல நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம்.

தவெக இப்போது தான் வந்துள்ளது. அவர்களுக்கு வாய்ப்பு தர வேண்டும். எங்கள் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளோம். தமிழகத்தின் வளர்ச்சிக்காக இந்த அரசு பாடுபட வேண்டும். அதிமுக பல தோல்விகளை கண்டுள்ளது. அதைக் கண்டு நாங்கள் துவண்டுவிட மாட்டோம். சி.வி.சண்முகத்தின் கருத்துதான் எங்கள் கருத்து; எங்கள் கருத்து தான் அவரின் கருத்து" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சி.வி.சண்முகம் அணி எம்எல்ஏக்களான எஸ்.பி.வேலுமணி, சி. விஜயபாஸ்கர், கே.பி.அன்பழகன் உள்ளிட்டோர் பழனிசாமியை சென்னை பசுமைவழிச் சாலையில் நேற்று சந்தித்து சமாதானப்பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் உடன்பாடு எட்டப்பட்ட நிலையில், இரு அணியினரும் தலைமைச் செயலகம் புறப்பட்டுச் சென்றனர். அங்கு இரு அணிகள் சார்பிலும், தகுதி நீக்க நடவடிக்கை கோரி பேரவைத் தலைவரிடம் ஏற்கெனவே அளித்த கடிதத்தை திரும்பப் பெறுவதாக கடிதம் அளித்தனர்.

மேலும், அதிமுகவின் சட்டப்பேரவை கட்சித் தலைவராக பழனிசாமி, கொறடாவாக அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை தேர்ந்தெடுத்திருப்பதாகவும் பேரவைத் தலைவரிடம் கடிதம் அளித்தனர். இந்த நிகழ்வில், சி.வி.சண்முகம் உடன் வரவில்லை. அவர் அதிருப்தியில் இருப்பதாகத் தெரிகிறது. அவருடன் மூத்த நிர்வாகிகள் மேற்கொண்ட சமரசமும் தோல்வியில் முடிந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், "அண்ணன் தம்பி போல நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம். எங்களின் கருத்து வேறுபாடுகள் களையப்பட்டது. சி.வி.சண்முகத்தின் கருத்தும் எங்கள் கருத்தும் வெவ்வேறு அல்ல" என அதிமுக எம்எல்ஏ எஸ்.பி. வேலுமணி தெரிவித்துள்ளார்.

## 'உங்களை உறுத்தவில்லையா?' கோடம்பாக்கம் சம்பவத்தை முன்வைத்து முதல்வர் விஜய்க்கு இபிஎஸ் கேள்வி

சென்னை: மே.29-

"முதல்வரே, எந்த குழந்தைகளை வைத்து நீங்கள் வாக்கு சேகரித்தீர்களோ, அதே குழந்தைகள் உங்கள் ஆட்சியில் பாதுகாப்பு இன்றி நிற்கின்றனர். இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "சென்னை கோடம்பாக்கத்தில் காவலர் உள்ளிட்ட மூவர் சிறுவனுக்கு வாயில் மது ஊற்றி, கொடும் பாலியல் தொல்லைக்கு ஆளாக்கியதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. சிறுவன் தன்னை தற்காத்துக் கொள்ள டிவி ரிமோட்டால் காவலரைத் தாக்கிவிட்டு தப்பி ஓடி, அசோக் நகர் காவல் நிலையத்துக்கு நடந்தே வந்து புகார் அளித்துள்ளதாக செய்திகள் வருகின்றன.

தமிழகத்தில் நாள்தோறும் பரிணமிக்கும் குற்றச் செயல்களின் தன்மை, மிகுந்த அச்சமூட்டுகிறது. முதல்வரே, எந்த குழந்தைகளை வைத்து நீங்கள் வாக்கு சேகரித்தீர்களோ, அதே குழந்தைகள் உங்கள் ஆட்சியில் பாதுகாப்பு இன்றி நிற்கின்றனர். இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

"சட்டம் ஒழுங்கு ஆய்வுக் கூட்டம்" என ஒன்றை நீங்கள் நடத்தியதாக ஒரு வீடியோவை உங்கள் அரசு வெளியிட்டது. அது மற்றுமொரு சம்பிரதாயத்துக்கான கூட்டமாக மாற்றி விடப்பட்டு உள்ளதோ என்ற சந்தேகங்கள் வலுப்பெறுகிறது. வேலியே பயிரை மேயும் கொடூரம் நடப்பது உங்கள் மனதை உறுத்தவில்லையா?

சிறுவனுக்கு நேர்ந்துள்ள இந்த கொடுந்துயருக்கு காரணமான கொடூரர்கள் யாராக இருப்பினும், அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இனியேனும் "கோட் சூட் போட்டோஷூட்" மாடல் ஆட்சியை கைவிட்டு, சட்டம் ஒழுங்கைக் காக்க உணர்வோடு செயல்பட வேண்டும் என பொய்க்கால் குதிரை அரசை வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ரீல்ஸ் மூலம் முதலீட்டை ஈர்க்கும் அமைச்சர் கீர்த்தனா விமர்சனமும் வரவேற்பும்

சென்னை: மே.29-

தொழில்துறையில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் அரசின் கொள்கைகள் குறித்து தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா ரீல்ஸ் வெளியிட்டுள்ளார். இதற்கு ஒருபுறம் வரவேற்புகள் கிடைத்தாலும், மறுபுறம் விமர்சனங்களும் குவிந்து வருகின்றன.

தமிழக தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா வெளியிட்ட ரீல்ஸ் பதிவில், 'தமிழகம் எதிர்காலத்திற்காக காத்திருக்கவில்லை, அதை நாங்கள் கட்டமைக்கிறோம். கோப்புகள் மற்றும் ஒப்புதல்களுக்காக நீண்ட காலம் காத்திருக்க வைக்கும் அரசை யாரும் விரும்புவதில்லை. அதனை சரிசெய்யவே முதல்வர் விஜய் என்னை நியமித்துள்ளார்.

நமது அரசு 21 நாட்களில் விரைவான அனுமதி மற்றும் ஒற்றைச் சாளர ஒப்புதல்களுக்கு உறுதியளிக்கிறது. பிரச்சினைகளை என்னிடமும், முதல்வரிடமும் நேரடியாக கொண்டு செல்லலாம் என்று உறுதியளிக்கிறோம்.



ஏஐ நகரங்கள் முதல் பசுமை ஹைட்ரஜன், மேம்பட்ட உற்பத்தி மற்றும் விண்வெளிப் பொருளாதாரம் என பல புதுமைகளை செயல்படுத்தும் ஒரு சூழலை எங்கள் அரசு உருவாக்குகிறது.

முதல்வர் ஜோசப் விஜய்யின் தொலைநோக்கு தலைமையின் கீழ், தமிழகத்தை இந்தியாவின் முதலீடு மற்றும் கண்டுபிடிப்புகளின் மையமாக மாற்ற உறுதிபூண்டுள்ளோம். எதிர்காலம் இங்கே உள்ளது. எனவே தமிழகத்தில் முதலீடு செய்யுங்கள்' என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரங்களில் ரீல்ஸ் மூலமாக கவனம் ஈர்த்த விருதைமகள் கீர்த்தனா, இப்போது தொழில் துறை அமைச்சரான பின்னரும் முதலீடுகளை ஈர்க்க அதே ரீல்ஸ் வழிமுறைகளை பயன்படுத்துவது சமூக வலைதளங்களில் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது.

அனைத்து தரப்பையும் சென்று சேரும் வகையில், அமைச்சர் கீர்த்தனா ரீல்ஸ்களை வெளியிட்டுள்ளார் என ஒரு தரப்பு வரவேற்பு தெரிவித்துள்ளது. அதே நேரத்தில், வெளிநாடு மற்றும் உள்நாட்டு தொழில் முதலீடுகளை ஈர்க்க ரீல்ஸில் அழைப்பு விடுப்பது பொருத்தமானதாக இருக்குமா என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளது.

## "தவெகவில் இணைய 90% அதிமுக நிர்வாகிகள் விருப்பம்" அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தகவல்

சென்னை: மே.29-

"திமுகவுடன் இணைவதாக பழனிசாமி எடுத்த முடிவின் காரணமாகவே அதிமுகவினர் தவெகவில் இணைகின்றனர். அதிமுகவில் உள்ள 90 சதவீத நிர்வாகிகள் தவெகவில் இணைய விருப்பம் தெரிவித்து ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்துள்ளனர்" என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

சென்னை பனையூரில் மாற்றுக்கட்சியினர் தவெகவில் இணையும் விழாவில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "யார் மக்கள் முன்பு உறுதியாக நிற்கிறார்களோ, மக்கள் அவர்களை தலைவராக உருவாக்குவார்கள். இப்படித்தான் அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா உருவாக்கப்பட்டார்கள். அப்படித்தான் ஜோசப் விஜய்யும் உருவாக்கப்பட்டுள்ளார். எனக்கு அதிர்ஷ்டத்தின் மீது நம்பிக்கையில்லை. ஆனால் செங்கோட்டையன் எம்ஜிஆர், ஜெயலலிதாவிடம் அமைச்சராக இருந்தவர். இப்போது முதல்வர் விஜய் தலைமையிலும் அமைச்சராக உள்ளார். இந்த அதிர்ஷ்டம் யாருக்கு கிடைக்கும்.

மதச்சார்பின்மை, சமூக நீதியை காக்கும் வகையில் காங்கிரஸ், இடதுசாரிகள், விசிக, ஐயூஎம்எல் கூட்டணியை முதல்வர் உருவாக்கியுள்ளார். திமுக ஆட்சியில் முதல்வர் குடும்ப நிதி, அமைச்சர் நிதி, கட்சி நிதி, அதிகாரிகள் நிதி என ஊழல் இருக்கும். இன்று எந்த ஊழலும் இல்லை. இன்று முதல்வர்



தொடங்கி அமைச்சர்கள், அதிகாரிகள் வரை ஊழல் இல்லை.

இன்று சிஎம்டிஏவில் வீடு கட்ட ஒப்புதல் வாங்க பணம் கொடுக்க தேவையில்லை. பத்திரப் பதிவு, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை என எந்த துறையிலும் ஊழல் இல்லை. தமிழகத்தில் ஊழலை ஒழித்த வரலாற்றை முதல்வர் விஜய் உருவாக்கியுள்ளார். திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால், மீண்டும் பழையபடி அந்த குடும்பத்தின் ஊழல் கீழ்மட்டம் வரை தொடர்ந்திருக்கும்.

பிரச்சாரத்தில் சொன்னபடி முதல்வர் நேர்மையாக இருக்கிறார். முதல்வர் எவ்வழியோ அமைச்சர்களும், எம்எல்ஏக்களும் அவ்வழியே செயல்படுகின்றனர். எங்கள் கூட்டணி அமைச்சரவையில் காங்கிரஸ், விசிக, ஐயூஎம்எல் இடம்பெற்றன. அதனை திமுக தலைவர்கள் கடுமையாக விமர்சித்தனர்.

ஒவ்வொரு கட்சிக்கும் கூட்டணி குறித்து முடிவெடுக்க உரிமை உண்டு. இதுபோன்ற பண்ணையார்தனம், ஆதிக்கம் தான் திமுகவின் தோல்விக்கு காரணம். பிறப்பால் முதல்வராக உருவானதால் தான் இத்தகைய எண்ணம் ஸ்டாலினுக்கு வருகிறது.

அதிமுக முன்னாள் எம்எல்ஏக்கள், எம்.பிக்களை ஏன் வரவேற்கிறோம் என்றால், ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் பழனிசாமி எடுத்த முடிவுகள் தொண்டர்களுக்கு எதிராக இருந்தது. அதனால்தான் அக்கட்சி தொடர் தோல்விகளை சந்தித்தது.

நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலுக்குப் பின் திமுகவும், அதிமுகவும் கூட்டணியை உருவாக்க ஒரு முயற்சி நடந்தது. புதுச்சேரியில் எம்எல்ஏக்கள் கூட்டத்தில் பழனிசாமியை முதல்வராக்குவோம் என கையெழுத்து பெற்றுள்ளனர். 47 பேரை வைத்துக்கொண்டு எந்த நம்பிக்கையில் முதல்வராக முடியும் என பழனிசாமி கையெழுத்து பெற்றார். இதற்கு எதிராக சி.வி.சண்முகம், விஜயபாஸ்கர் கேள்வி எழுப்பினர்.

அதன்பின்னர் தான் உதயநிதியை முதல்வராக்கி, பழனிசாமியை துணை முதல்வராக்கி, மாதாமாதம் ஊழல் நிதியை பிரித்துக்கொள்ள முடிவெடுத்தனர். இதனை முதலில் எதிர்த்த கம்யூனிஸ்டுகளுக்கு கோடான கோடி நன்றிகள். இதனை எதிர்த்தே காங்கிரஸ், விசிக, இடதுசாரிகள், ஐயுஎம்எல் எங்களை ஆதரித்தனர்.

மக்களின் தீர்ப்புக்கு எதிராக ஆட்சியமைக்க திமுக, அதிமுக, பாஜக சேர்ந்து ஒரு சூழ்ச்சியை செய்தது. இது உண்மையான எம்ஜிஆர், ஜெயலலிதா தொண்டர்களுக்கு அதிமுக மீது கடும் அதிருப்தியை உருவாக்கியது.

அதிமுகவினர் எங்களிடம் வருவது குறித்து எங்கள் கூட்டணி கட்சியினருக்கு நான் தொலைபேசியில் விளக்கம் அளித்தேன். எந்த எம்எல்ஏவையும் ஆஃபர் கொடுத்து நாங்கள் கூப்பிடவில்லை. எங்கள் தலைவர் அப்படிப்பட்டவர் இல்லை. முதல்வர் விஜய் மீது நம்பிக்கை வைத்து அவர்கள் வருகிறார்கள்.

இந்த நம்பிக்கையில்தான் தங்கள் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்து, நேர்மையாக தேர்தலை சந்தித்து, வாழ்நாள் முழுவதும் தவெகவில் பயணிக்க அவர்கள் வருகின்றனர். அவர்களை வரவேற்பது எங்கள் கடமை. திமுகவுடன் இணைவதாக பழனிசாமி எடுத்த முடிவின் காரணமாகவே அதிமுகவினர் தவெகவில் இணைகின்றனர்.

இன்று தவெக மட்டும்தான் ஒரே நம்பிக்கை என்று செங்கோட்டையனை போன்று பெரும்பாலான நிர்வாகிகள் எங்களுடன் இணைகின்றனர்.

அதிமுகவில் உள்ள 90 சதவீத நிர்வாகிகள் தவெகவில் இணைவதற்கான வேண்டுகோளை ஏற்கெனவே கொடுத்துவிட்டனர். இனி ஒவ்வொரு சனி, ஞாயிறு கிழமைகளில் மாற்றுக்கட்சியினரை தவெகவில் இணைக்கும் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். பணம் கொடுத்து மாற்றுக் கட்சியினரை தவெகவில் சேர்ப்பதாக திமுகதான் அவதூறு செய்கிறது" என்றார் ஆதவ் அர்ஜுனா.



## நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில்மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மருத்துவர்களுடனான ஆய்வுக்கூட்டம்

உதகை, மே.29-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் செயல்பாடுகள் குறித்து, மருத்துவர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கை, கர்ப்பிணி தாய்மார்களின் எண்ணிக்கை, அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சிகிச்சைகள், பரிசோதனைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டு, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்டவற்றை சுத்தமாகவும், சுகாதாரமான முறையில் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், மருத்துவமனைக்கு வந்து செல்லும் நோயாளிகள் பயன்படுத்தும் வகையில் கழிப்பறைகள் சுத்தமாக பராமரிக்க வேண்டும் எனவும், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளை நல்ல முறையில் கவனித்து அவர்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகளை வழங்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.இக்கூட்டத்தில், இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) ராஜசேகரன், துணை இயக்குநர்கள் சோமசுந்தரம் (சுகாதாரப்பணிகள்), திரு.கனகராஜ் (தொழுநோய்), வேலாயுதம் (காசநோய்) மற்றும் மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## குன்னூர் சிம்ஸ்பூங்காவில் 66வாது பழக்காட்சியை நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்



குன்னூர் மே.29-

நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்காவில், மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் நடைபெற்ற 66 வது பழக்காட்சியை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பார்வை யிட்டார்.நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடை விழாவை முன்னிட்டு மலர்காட்சி, ரோஜாகாட்சி, பழக்காட்சி மற்றும் மலைப்பயிர்கள் காட்சி உள்ளிட்ட பல்வேறு காட்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 66வது பழக்காட்சி 27.05.2026 முதல் 30.05.2026 வரை 4 நாட்கள் கோலாகலமாக நடைபெற உள்ளது. இவ்வாண்டு பழக்காட்சியின் சிறப்பம்சமாக 1.0 டன் எடை கொண்ட பேரிச்சம் பழங்களை கொண்டு பிரமாண்ட டைனோசர் வடிவமைப்பு பார்வையாளர்களை கவரும் விதமாக அமைந்துள்ளது. பழக்காட்சியின் பிற அம்சங்களாக 4.5 டன் எடையுள்ள பல்வேறு பழ வகைகளை கொண்டு ஜூராசிக் பார்க் நுழைவு வாயில் (Jurassic Park Gate), சிறிய வகை டைனோசர் (Tricera-tops), டைனோசர் முட்டை மற்றும் முட்டையிலிருந்து வெளிவருதல் (Dinisaur Hatchery With Eggs) தாவரங்களை உண்ணும் டைனோசர் (Brachiosaur-us) மற்றும் டைனோசர் காலத்து பறவை போன்ற வடிவமைப்புகளும், தோட்டக்கலைத்துறை மூலம் 160 வகையான பழ அரங்குகளும், அரசு மற்றும் தனியார் அரங்குகள், போட்டியாளர் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது.மேலும், தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்டங்களின் பழ வகைகளை பறைசாற்றும் விதமாக பல்வேறு காட்சி திடல்கள் அமைக்கப்பட்டு, அதில் கோயம்புத்தூர், தர்மபுரி, ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம், மற்றும் தென்காசி போன்ற மாவட்டங்களை சார்ந்த தோட்டக்கலை துறையினரால் அதியமான் கோட்டை, இருவாச்சி பறவை, மரகதபுறா, இரட்டைமயில், பவானிசாகர் அணை, கழுகு மற்றும் வீணை போன்ற பல்வேறு பழங்களை கொண்டு விதவிதமான உருவங்கள் காட்சிப்ப டுத்தப்பட்டுள்ளது.மேலும், சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்கள் கண்டு களிக்கும் வகையில் பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகள் தோட்டகலைத்துறையின் மூலம் நடைபெற்றது. இந்த 66வது பழக்காட்சியானது இன்று முதல் 30.05.2026 நான்கு நாட்கள் நடைபெற உள்ளதால் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் வருகை புரிந்து இக்காட்சியினை கண்டு ரசிக்குமாறு மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.இந்நிகழ்வில், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதாஅவர்கள், துணை இயக்குநர் சிவக்குமார், உதவி இயக்குநர்கள் விஜயலட்சுமி, பாசில், பபித்தா, அனிதா, திரு.பரத், ஜெயந்தி, தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா பள்ளியில் பக்ரீத் பண்டிகை கொண்டாட்டம்



மாதவரம், மே.29-

மாதவரம் தொகுதி செங்குன்றம் பஜாரில் அமைந்துள்ள மஸ்ஜிதே ஆயிஷா பள்ளியில் பக்ரீத் பண்டிகை சிறப்புத் தொழுகை தலைமை இமாம் மௌலவி காஜா முயீனுத்தீன் ஜமாலி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. துணை இமாம் மௌலவி அபுல்ஹசன் பிலாலி அனைவரையும் வரவேற்றார். மஸ்ஜிதே ஆயிஷா தலைவர் காஜா மொய்தீன், செயலாளர் அப்துல் லத்தீப், பொருளாளர் முகம்மது ஆஷிக் அலி, துணைத்தலைவர் ஹாபிழ் அக்பர்பாஷா, மஸ்ஜிதே ஆயிஷா நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஜாகிர் உசேன், சேட்டு, அப்துல் வாஹித், ஷானவாஸ், சாகுல்அமீது, கலீல் ரஹ்மான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு உலக மக்களின் நன்மைக்காகவும், முஸ்லிம்களின் பிரச்னைகள் இன்றி வாழவும் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது. சிறப்பு தொழுகை முடிந்த பின்னர் ஒருவருக்கொருவர் கட்டிப் பிடித்து அன்பை வெளிப்படுத்தி கொண்டனர். தொழுகையில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி ஒருவருக்கொருவர் வாழ்த்து தெரிவித்து மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 10 மற்றும் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்துவது குறித்து அனைத்து தலைமையாசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மதன்குமார், துணை ஆட்சியர் (பயிற்சி) சௌமியா, மாவட்ட கல்வி அலுவலர்கள் கௌசர், கிருஷ்ணன், உதவி திட்ட அலுவலர் மகேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கல்வி)சர்தார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தென்காசி மாவட்ட மக்களே உங்கள் குரல்களையும் குறைகளையும் பேச்சாகவோ படமாகவோ பதிவு செய்யுங்கள்

தென்காசி, மே.29-

தென்காசி மாவட்டத்திலுள்ள கடையநல்லூர் தென்காசி சங்கரன்கோவில் செங்கோட்டை புளியங்குடி மற்றும் சுரண்டை நகராட்சி வாழ்பொதுமக்களே நகராட்சிகளின் சேவைகள் குறித்து தங்களது புகார்கள் மற்றும் குறைகளை தெரிவிக்க உதவி மையம் (HELP-DESK) அமைக்கப்பட்டுள்ளது இந்த உதவி மையத்தை கீழ்காணும் கைபேசி ( மொபைல்) எண்ணில் தொடர்பு கொண்டு புகார்கள் மற்றும் குறைகளை இதில் தெரிவிக்கலாம் தென்காசி நகராட்சிக்கு 8438474656 என்ற எண்ணிலும் சுரண்டை நகராட்சிக்கு 8610008496 என்ற எண்ணிலும் கடையநல்லூர் நகராட்சிக்கு 8438214656 என்ற எண்ணிலும் செங்கோட்டை நகராட்சிக்கு 8610718016 என்ற எண்ணிலும் சங்கரன்கோவில் நகராட்சிக்கு 8807313435 என்ற எண்ணிலும் புளியங்குடி நகராட்சிக்கு 8778967388 என்ற எண்ணிலும் பொதுமக்கள் தங்கள் புகார்கள் மற்றும் குறைபாடுகளை புகைப்படமாகவோ குறுஞ் செய்தியாகவோ அல்லது கைபேசி அழைப்பின் வாயிலாகவோ 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம் என நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.



■ சென்னை ஆவடி, பிரதான சாலை திரு சங்கரர் நகரில், அமைந்துள்ள அருள்மிகு சங்கர விநாயகர் சுவாமி திருக்கோயிலில் மூலவர் முழுமுதற் கடவுளான அருள்மிகு சங்கர விநாயகருக்கு புனராவர்த்தன ஜீரணோத்தாரண நூதன பாலமுருகர் மற்றும் ஐயப்ப சுவாமி பிரதேச ஸ்ரீ செய்து அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா 29.05.2026 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மேல் 10:30 மணிக்குள் நடைபெற உள்ளது. அனைத்து பக்தர்களும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகிகள் மற்றும் விழா குழுவினர் அன்புடன் அழைக்கின்றனர். இவ்விழாவில் அருள்மிகு கமலகண்ணி அம்மன் திருக்கோயில் மௌனகுரு தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள் கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்து அருள் ஆசி வழங்க உள்ளார்.



■ சென்னை ஆவடி, பழைய அக்ரஹாரம் குளக்கரை தெருவில் அமைந்துள்ள, அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கோயில் நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தது ஆகும். வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும், ஆலயம் சார்பில் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய தலைவர் சீனிவாசன், செயலாளர் நாகேந்திரன், பொருளாளர் மனோகரன் மற்றும் ஆலய நிர்வாகிகள்,விழா குழுவினர் சிறப்பாக கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

## கிருஷ்ணகிரிஅரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்உள்நோயாளிகளுக்கான உணவு பொருட்கள் ஒதுக்கீட்டைஉயர்த்த நடவடிக்கை - தவெக எம்எல்ஏ தகவல்



கிருஷ்ணகிரி, மே.29-

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளிகளுக்கான உணவுப் பொருட்கள் ஒதுக்கீட்டை உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்படும் என தவெக எம்எல்ஏ முகுந்தன் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தவெக கிருஷ்ணகிரி சட்டப்பேரவை உறுப்பினர் முகுந்தன் களஆய்வு மேற்கொண்டார். அப்போது, மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவர்கள், நோயாளிகளின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து எம்எல்ஏ கூறியதாவது: மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தொடங்கப்பட்ட போது ஆரம்ப காலத்தில் நாள்தோறும் சராசரியாக 400 உள்நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெற்று வந்தனர். இதனை கருத்தில் கொண்டு தினமும் 3 வேளை உணவு வழங்குவதற்காக, மாதாந்திர ஒதுக்கீடாக 2,500 கிலோ அரிசி அரசு நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வந்தது.

ஆனால், தற்போதைய சூழலில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், அண்டை மாநில எல்லைக் கிராமங்களில் இருந்தும் நாளொன்றுக்குச் சராசரியாக 1,200 க்கும் மேற்பட்ட உள்நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை பெற்று வருகின்றனர். நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கான உணவின் தேவை மும்மடங்காக உயர்ந்துள்ள நிலையிலும், பழைய கணக்கீட்டின்படியே தற்போதும் அதே 2,500 கிலோ அரிசி மட்டுமே மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இது உணவுத் தேவைக்கு போதுமானதாக இல்லை. ,அனைத்து உள்நோயாளிகளுக்கும் தடையின்றி உணவு வழங்குவதில் மருத்துவமனை நிர்வாகத்திற்குப் பற்றாக்குறையும், கடுமையான நடைமுறைச் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. எனவே, 1,200 உள்நோயாளிகளின் மாதாந்திர உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், தற்போது வழங்கப்படும் 2,500 கிலோ அரிசி ஒதுக்கீட்டை மாதந்தோறும் 4,500 கிலோ ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தேனி மாவட்டம் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர்ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது



தேனி, மே.29-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகள் சுயமாக வாழ்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதன் மூலம், அவர்கள் வாழ்விலும் முன்னேற்றம் காண முடியும் என்பதை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், மாற்றுத்திறனாளிகள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இன்றைய தினம் நடைபெற்ற சிறப்பு குறைதீர் கூட்டத்தில் மாற்றுத்திறனாளி அடையாள அட்டைகள், மாதாந்திர உதவித்தொகை, மூன்று சக்கர வாகனம், காதுக்கருவி, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 102 மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.அதனைத் தொடர்ந்து, ரூ.8,14,400/ மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் 8 பயனாளிகளுக்கும், ரூ.43,470/ மதிப்பிலான ஸ்மார்ட்போன் 3 பயனாளிகளுக்கும், ரூ. 3,00,000/ மதிப்பிலான நவீன செயற்கை கால் 4 பயனாளிகளுக்கும், ரூ.2,376/ மதிப்பிலான ஊன்றுகோல் 4 பயனாளிகளுக்கும், ரூ.457/ மதிப்பிலான ஒளிரும் மடக்குக்குச்சி மற்றும் கருப்பு கண்ணாடி 1 பயனாளிக்கும், ரூ.7,650/ மதிப்பிலான காதொலிக்கருவி 2 பயனாளிகளுக்கும் என மொத்தம் 22 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.11,68,353/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, மாவட்ட வழங்கல் அலுவல ர்.நல் லையா, தனித்துணை ஆட்சியர் கவிதா, இணைப்பதிவாளர் (கூட்டுறவுத்துறை) நர்மதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.ஏ.எடிசன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## உலக பட்டினி தினத்தை முன்னிட்டு பாரதிநகர் பகுதியில் முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது



தாம்பரம் மே.29-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பாரதிநகர் பகுதியில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் ஏழை எளியோருக்கு தங்குதடையின்றி அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தலைவரும்,தமிழ்நாடு முதலமைச்சருமான ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, ஏழை மற்றும் எளிய மக்களின் பசியை போக்கும் வகையில் உணவு வழங்கும் பணிகளை மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும் என தலைவர் விஜய் அறிவுறுத்தியுள்ளார்.இந்த நிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சரும்,தவெக பொதுச்செயலாளருமான என்.ஆனந்த்,மனித மேம்பாட்டு துறை அமைச்சர் த.சரத்குமார் ஆகியோரின் ஆலோசனை படி செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழக துணை செயலாளர் வரலட்சுமி (எ) ஷிபா பிரேம் அவர்களின் ஏற்பாட்டில் பாரதிநகர் பகுதியில், உள்ள முதியோர் இல்லத்தில் உள்ள முதியவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் மகளிர் அணி பூங்கோதை, சினேகா கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு சேவை பணியில் ஈடுபட்டனர் முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்கள் நன்றியை தெரிவித்தனர்

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில்பக்ரீத் பண்டிகையையொட்டி இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்





கிருஷ்ணகிரி, மே.29-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பக்ரீத் பண்டிகையினையொட்டி இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.அன்பையும், தியாகத்தையும் வெளிகாட்டும் விழா, ஈகைத் திருநாள் எனப்படும் பக்ரீத் பண்டிகையாகும். இஸ்லாமியர்களின் மிக முக்கியமான பண்டிகைகளில் இதுவும் ஒன்று. இறைவனின் தூதரான இப்ராகீம் நபிகளார், தனது மகன் நபி இஸ்மாயிலுக்கு பதிலாக, ஆட்டை பலி கொடுத்ததை நினைவு கூறும் வகையிலும், அவரின் தியாகத்தை போற்றும் வகையிலும் இந்த ஈகைத் திருநாள் கொண்டாடப்படுகிறது. பலி தருதல் என்ற இஸ்லாமிய கடமைகளில் ஒன்றை நிறைவேற்றும் வகையில், இன்று அசைவ உணவுகளை சமைத்து பலருக்கும் பகிர்ந்து கொடுத்து, இஸ்லாமியர்கள் இந்த விழாவை கொண்டாடி வருகின்றனர். இவ்விழா, ஹஜ் பெருநாள் என்றும் அழைக்கப்படுகிறது.

அதன்படி, கிருஷ்ணகிரி ராஜீவ் நகரில் உள்ள ஈத்கா மைதானம், மற்றும் ராயக்கோட்டை மேம்பாலம் அருகில் உள்ள மைதானத்தில், பக்ரீத் பண்டிகையையொட்டி இஸ்லாமியர்கள் நேற்று காலை, 8 மணிக்கு சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர். மேலும் அசைவ உணவுகளை சமைத்து, உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பகிர்ந்து அளித்து, பக்ரீத் பண்டிகையை கொண்டாடினர். இதே போல் காவேரிப்பட்டணம், பர்கூர், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, வேப்பனஹள்ளி, சூளகிரி, ராயக்கோட்டை, கெலமங்கலம், ஓசூர், தேன்கனிக்கோட்டை, மத்திகிரி, தளி, அஞ்செட்டி என மாவட்டம் முழுவதும் இன்று இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.



## பசிப்பிணி போக்கும் நோக்கில் பழனியில் களம் கண்ட தவெக நிர்வாகிகள்!

திண்டுக்கல், மே.29-

திண்டுக்கல் மாவட்டம் பழனி வ உ சி பேருந்து நிலையத்தில் உலகளவில் பசி, வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படும் மக்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பட்டினியற்ற சமுதாயத்தை உருவாக்கவும் ஆண்டுதோறும் மே 28ம் தேதி உலக பட்டினி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி, தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) தலைவர் ஜோசப் விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க, திண்டுக்கல் மாவட்டம் பழனி வ.உ.சி பேருந்து நிலையத்தில் மாபெரும் அன்னதான நிகழ்வு நடைபெற்றது.பேருந்து நிலையத்திற்கு வந்த பயணிகள், ஏழை எளிய மக்கள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு தூய்மையான மற்றும் ஆரோக்கியமான உணவு பரிமாறப்பட்டது. இந்நிகழ்வில் தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா. மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன். நகர செயலாளர் மிதுன். மாவட்டத் இணைசெயலாளர் விஜய் சிவா. மாவட்ட துணைசெயலாளர் நாகராஜன். ஒன்றிய மற்றும் நகர நிர்வாகிகள், தொண்டர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டு உணவினைப் பரிமாறிச் சிறப்பித்தனர்.

பசிப்பிணி போக்கும் நோக்கில் தவெகவினர் ஒருங்கிணைத்த இந்த நலத்திட்ட உதவி அப்பகுதி பொதுமக்களிடையே நெகிழ்ச்சியையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

## ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி, மே.29-

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசு பணியாளர்களுக்கு, நிலுவையிலுள்ள ஓய்வூதியப் பணப்பலன்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவது தொடர்பான குறைகளை பரிசீலனை செய்யும் பொருட்டு, ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர் சங்கங்கள் அனைவரும் கலந்து கொள்ளும் "ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்" மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையிலும், மண்டல இணை இயக்குநர் (மதுரை), மாவட்ட கருவூல அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) ஆகியோரின்



முன்னிலையிலும் 03.07.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள புதிய கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே, தேனி மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியதாரர்கள் மற்றும் ஓய்வூதிய சங்கங்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி என்ற முகவரிக்கு 19.06.2026 (வெள்ளிக்கிழமை)க்குள் அனுப்பி வைக்குமாறும், ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும் நாளன்று தேனி மாவட்டத்தில் கோரிக்கை நிலுவை உள்ள அனைத்து ஓய்வூதியதாரர்கள் மற்றும் ஓய்வூதிய சங்க நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.



## ஆற்காட்டில் தவெக சார்பில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு அன்னதானம்

ராணிப்பேட்டை மே,29-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பேருந்து நிலையத்தில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு மாபெரும் அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு ஆற்காடு நகர செயலாளர் வினோத் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக மேற்கு மாவட்ட செயலாளர் விஜய் மோகன் கலந்துகொண்டு அன்னதான நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்பித்தார். இதில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. முன்னதாக மாவட்டச் செயலாளர் விஜய் மோகனுக்கு பட்டாசு வெடித்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்னதான நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாவட்ட செயலாளர் விஜய் மோகன் முதலில் கர்மவீரர் காமராஜர் திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பின்பு அன்னதானத்தை துவக்கி வைத்தார் இதில் தவெக நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





## படப்பை அடுத்த சாலமங்கலத்தில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

தாம்பரம் மே.29-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட படப்பை அடுத்த சாலமங்கலம் பகுதியில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் ஏழை எளியோருக்கு தங்குதடையின்றி அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, ஏழை மற்றும் எளிய மக்களின் பசியை போக்கும் வகையில் உணவு வழங்கும் பணிகளை மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும் என தலைவர் விஜய் அறிவுறுத்தியுள்ளார்.இந்த நிலையில் அயலக வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சரும் காஞ்சிபுரம் மாவட்ட செயலாளருமான தென்னரசு ஆலோசனை படி ஒன்றிய செயலாளர் விஜயகுமார் தலைமையில் தமிழக வெற்றி கழக நிர்வாகி கோ.டேவிட் மற்றும் கலைச்செல்வி ஆகியோர் ஏற்பாட்டில் சாலமங்கலம் பகுதி அருகே மதியம் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பிரகாஷ், மனோத்தா, ரவி, அன்பரசு, அஸ்வின், பிரதீப், சதீஷ், கௌதம் மற்றும் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய பகுதி மற்றும் மகளிர் அணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## கடையநல்லூரில் தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு சார்பில் நான்கு இடங்களில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நடைபெற்றது

### ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்

தென்காசி, மே.29-

கடையநல்லூர் இக்பால் நகர் தவ்ஹீத் ஜமாத் சார்பில் கடையநல்லூர் இக்பால் நகர் தெப்பக்குளம் என்டி எப் (NTF) திடலில் நடைபெற்ற சிறப்புத் தொழுகை நடைபெற்றது தொழுகைக்கு பிறகு ரவ்லத்துஸ் ஸாலிஹாத் பெண்கள் இஸ்லாமியக் கல்லூரி முதல்வர் முஹம்மது மைதீன் ரியாஜி அவர்கள் குத்பா பிரசங்கம் நடத்தினார்.இந்த தொழுகையில் இக்பால் நகர் தவ்ஹீத் ஜமாஅத் தலைவர் நெய்னார் சாகுல் ஹமீது,செயலர் ஜமீன் அஹமது, பொருளாலர் மஞ்சி துராப்ஷா, கலந்தரி இப்ராகிம், மற்றும் இக்பால் நகர் தவ்ஹீத் ஜமாத் நிர்வாகிகள் உட்பட ஆயிரக்கனக்கானோர் கலந்து கொண்டனர். இது போல் இரசாலியாபுரம் தெருவில் ழிஜிதி மாநில செயலர் சதாம் ஹுசைன் , மஸ்ஜிதுர் ராஷித் திடலில் அப்து காதர், மக்காநகர் தவ்ஹீத் திடலில் காதர் ஒலி கைரி ஆகியோர் பெருநாள் தொழுகை நடத்தி பிறகு குத்பா பிரசங்கம் நடத்தினார்கள். தொழுகைக்கான ஏற்பாட்டை கடையநல்லூர் தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு மற்றும் அனைத்து தவ்ஹீத் பேரவை பொருப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்..





## வேட்டியம்பட்டி கிராமத்தில் மாரியம்மன் கோயில் திருவிழா

### ஏராளமான ஆடுகள், கோழிகள் பலியிட்டு நேர்த்திக்கடன்

கிருஷ்ணகிரி, மே.29-

கிருஷ்ணகிரி அடுத்த வேட்டியம்பட்டி கிராமத்தில் நடந்த மாரியம்மன் கோயில் திருவிழாவின் போது, ஏராளமான ஆடுகள் மற்றும் கோழிகள் பலியிட்டு பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர்.

கிருஷ்ணகிரி அடுத்த வேட்டியம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள நவசக்தி விநாயகர், மகாசக்தி மாரியம்மன், சத்தியம்மன் மற்றும் சித்திரக்கல் மாரியம்மன் கோயில் திருவிழா கடந்த 19ம் தேதி துவங்கியது. அன்று ஏராளமான பெண்கள் கூழ் ஊற்றி வேண்டுதல் நிறைவேற்றினர். 21ம் தேதி முதல் 27ம் தேதி வரை 7 நாட்கள் ஆட்டாங்கோல் அடிக்கும் நிகழ்ச்சி நடந்தது. 22ம் முதல் 26ம் தேதி வரை அம்மனுக்கு கூழ் ஊற்றி வேண்டுதல் நிறைவேற்றினர். இரவு 8 மணிக்கு, வாணவேடிக்கை நடந்தது.

நேற்று தேதி காலை முதல் பொன்கூடை எடுத்து, ஏராளமான பெண்கள் மா விளக்கை ஊர்வலமாக கோயிலுக்கு கொண்டு சென்றனர். அங்கு கோயில் முன்பு ஏராளமானோர் ஆடு, கோழிகளை பலியிட்டு வேண்டுதல் நிறைவேற்றினர். இதையொட்டி, மகாசக்தி மாரியம்மன், சித்திரக்கல் மாரியம்மன், சக்தியம்மன் ஆகியோர் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலித்தனர். மதியம் 3 மணிக்கு, கந்தல் பெரியப்பன் கோயிலுக்கு திரளான பெண்கள் மாவிளக்கை எடுத்துச் சென்றனர். இன்று (28ம் தேதி) மதியம் ஊர் மாடு விடும் நிகழ்ச்சி நடக்க உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வேட்டியம்பட்டி கிராம மக்கள் செய்திருந்தனர்.

### மாலை தந்தி நாளிதழின் செய்தி எதிரொலி

## உதகை அரசு மருத்துவக் கல்லூரி நுழைவாயில் சாலை பகுதியில் சிதறி கிடந்த ஜல்லித் துகள்கள் அகற்றப்பட்டன

குன்னூர் மே,29-

நீலகிரி மாவட்டம் உதகை அரசு மருத்துவக்கல்லூரி நுழைவாயில் சாலை பகுதியில், சிதறி கிடக்கும் ஜல்லி துகள்களால், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின்வாகன ஓட்டிகள், பாதிக்கப்படும் நிலை குறித்தும், இதனை உடனடியாக சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி, மாலை தந்தி நாளிதழில்,மே 26 அன்று, செய்தி வெளியிடப்பட்ட நிலையில், மாலை தந்தி நாளிதழின் செய்தி எதிரொலியாக, உதகை அரசு மருத்துவக் கல்லூரிநுழைவாயில் சாலை பகுதியில், சிதறி கிடந்த ஜல்லிதுகள்கள் உடனடியாக சரிசெய்யப்பட்டது.





# உலக பட்டினி தினம்: 3 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கிய தமிழக வெற்றி கழகம்

கிருஷ்ணகிரி, மே.29-

உலக பட்டினி தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இந்த நிகழ்ச்சிக்கு கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட தமிழக வெற்றி கழக மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் பார்த்திபன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டதுடன், ஏழை எளிய மக்களும் பயனடைந்தனர்.இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ் கலந்து கொண்டு அன்னதானத்தை தொடங்கி வைத்தார். மேலும், தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணி பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். உலக பட்டினி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த அன்னதான நிகழ்ச்சி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

# நைனாங்குளம் அருள்மிகு கூந்தப்பனை காளியம்மன் குடமுழுக்கு விழா



சிவகங்கை, மே.29-

சிவகங்கை அருகேயுள்ள நைனாங்குளம் கிராமத்தில் அருள்பாலித்து வரும் அருள்மிகு கூந்தப்பனை காளியம்மன் கோவில் அஷ்டபந்தன நூதன குடமுழுக்கு விழாவானது வெகு சிறப்பாக நடைபெற்றது...கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக சிறிய அளவில் கட்டப்பட்டிருந்த இந்த கூந்தப்பனை காளியம்மன் கோவிலானது தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு இரண்டாம் முறையாக குடமுழுக்கு செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது...குடமுழுக்கு விழாவில் மேளதாளம் முழங்கிட சிவாச்சார்யார்களால் வேத மந்திரங்கள் ஓதி புனித நீர் கோபுரக் கலசங்களில் நீர் ஊற்றப்பட்டு குடமுழுக்கு விழாவானது வெகு விமரிசையாக நடைபெற்றது... நிகழ்ச்சியின் இறுதியில் அறுசுவை சைவ உணவு பரிமாறப்பட்டது... விழா ஏற்பாடுகளை நைனாங்குளம் அரசனி கிராம மக்கள் மற்றும் கிராம இளைஞர்கள் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்...நைனாங்குளம் சுற்று வட்டாரப் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்...



# உலக பட்டினி தினத்தை முன்னிட்டு சிவகங்கை நகர தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பொதுமக்களுக்கு உணவு பரிமாறப்பட்டது

சிவகங்கை, மே.29-

உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சரும் தவெக தலைவருமான ஜோஸப் விஜய் ஆணையின்படி. சிவகங்கை தெற்கு மாவட்ட செயலாளர் முத்துபாரதி . சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் ஆகியோரது ஆலோசனையின் பேரில் சிவகங்கை நகர் பேருந்து நிலையத்தில் நகரச் செயலாளர் தளபதி கோபி ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் பாட்டில்கள் வழங்கப் பட்டது...நகரச் செயலாளர் தளபதி கோபி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் போது இணைச் செயலாளர் கணேஷ் . பொருளாளர் ஆனந்த்குமார் . செயற்குழு உறுப்பினர்கள் கலைச்செல்வி . சுமதி . மருதுபாண்டி . கனி . மைதீன் . அர்ஜுன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்... தொடர்ந்து மக்கள் பணிகளில் ஆர்வம் காட்டிவரும் சிவகங்கை நகர தவெக நகரச் செயலாளர் தளபதி கோபி உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் பொதுமக்கள் பலரும் தங்களது வாழ்த்துகளையும் நன்றியினையும் தெரிவித்துக் கொண்டனர்...

# புதுவையில் ஜூன் 4ம் தேதி பள்ளிகள் திறப்பு

புதுச்சேரி: மே.29-

புதுவையில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் கோடை வெயில் காரணமாக, ஏப்.27ம்தேதி முதல் மே 31ம்தேதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டது. ஜூன் 1ம்தேதி மீண்டும் பள்ளிகள் திறக்கப்படும் என்று கல்வித்துறை அறிவித்திருந்தது. இந்நிலையில் புதுவையில் கடந்த சில நாட்களாக கோடை வெயில் தொடர்ந்து 100 டிகிரிக்கு மேல் கொளுத்தி வருகிறது. அண்டை மாநிலமான தமிழகத்தில் கோடை விடுமுறை ஜூன் 3ம்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அங்கு ஜூன் 4ம்தேதிதான் பள்ளிகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தமிழகத்தை தொடர்ந்து புதுச்சேரியிலும் வரும் 4ம்தேதி பள்ளிகள் திறக்கப்படுகிறது. இதுதொடர்பாக முதல்வர் ரங்கசாமி கூறுகையில், 4ம்தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்றார்

# தேனி: பள்ளிக்கு தீ வைக்க முயற்சி? முதல்வருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக பரபரப்பு




தேனி, மே.29-

தேனி மெயின்ரோடு, டி.கல்லுப்பட்டியில் செயல்பட்டு வரும் செவன்த் டே அட்வென்டிஸ்ட் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில், கடந்த மே 25ஆம் தேதி சிலர் பள்ளிக்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டு, பள்ளி முதல்வருக்கு கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.செவன்த் டே அட்வென்டிஸ்ட் திருச்சபை மற்றும் அதன் கல்வி நிறுவனங்களில் நிர்வாக நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு முழுவதும் சுமார் 60 ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் சமீபத்தில் பணியிட மாற்றம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.இதில், இப்பள்ளியில் பணியாற்றி வந்த ஆசிரியர் சுகந்தியின் கணவரும், ஈ.புதுக்கோட்டை செவன்த் டே அட்வென்டிஸ்ட் சபை போதகருமான சவேரியார் வேலூர் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.இந்த இடமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, மே 25ஆம் தேதி காலை பள்ளியில் மாணவர் சேர்க்கை நடைபெற்று கொண்டிருந்த நேரத்தில், சிலர் பள்ளி வளாகத்தில் போஸ்டர்கள் ஒட்டி, பின்னர் குழுவாக பள்ளியை முற்றுகையிட்டதாக கூறப்படுகிறது.மேலும், "பள்ளிக்கு தீ வைப்போம்" என மிரட்டியதுடன், பள்ளி முதல்வருக்கும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பள்ளி சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து தென்கரை காவல் நிலையத்தில் பள்ளி நிர்வாகம் சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் மற்றும் பள்ளி நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இருதரப்பு உறவின் இயல்புநிலைக்கு எல்லையில் அமைதி முக்கியம்: இந்தியா சீனா ஒப்புதல்



புதுடெல்லி: மே.29-

எல்லைப் பகுதிகளில் அமைதியைப் பேணுவதே இரு நாடுகளுக்கு இடையிலான ஒட்டுமொத்த உறவுகளை இயல்புநிலைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று இந்தியாவும் சீனாவும் தெரிவித்துள்ளன. கிழக்கு லடாக்கில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு தொடர்பாக இந்தியாவும், சீனாவும் ஆலோசனை மேற்கொள்ளும் நோக்கில், எல்லை விவகாரங்கள் குறித்த ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக்கான பணிக்குழுவின் 35வது கூட்டம் பெய்ஜிங்கில் நேற்று (மே 27) நடைபெற்றது.இந்திய குழுவுக்கு வெளியுறவுத் துறை இணைச் செயலாளர் (கிழக்காசியா) சுஜித் கோஷும், சீன குழுவுக்கு அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகத்தின் எல்லை மற்றும் கடல்சார் விவகாரத் துறையின் தலைமை இயக்குநர் ஹூ யான்சியும் தலைமை தாங்கினர்.இக்கூட்டம் குறித்த அறிக்கையை இந்திய வெளியுறவு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ளது. அதில், 'இந்த கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்கள் ஆக்கப்பூர்வமானதாகவும், எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் அமைந்திருந்தன. இரு தரப்பினரும் இந்தியா சீனா எல்லைப் பகுதிகளில் நிலவும் சூழலை ஆய்வு செய்தனர். எல்லைப் பகுதிகளில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பேணுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர்கள் திருப்தி தெரிவித்தனர்.இந்த முன்னேற்றம், இருதரப்பு உறவுகளை படிப்படியாக இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு வழி வகுத்துள்ளது. எல்லை தாண்டிச் செல்லும் நதிகள் குறித்த நிபுணர்களின் ஆலோசனைக் கூட்டம் விரைவில் நடைபெற வேண்டும் என்று இருதரப்பிலும் வலியுறுத்தப்பட்டது.

24வது சிறப்பு பிரதிநிதிகள் பங்கேற்ற பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்டவை உள்பட, பல்வேறு செயல்முறைகளின் வாயிலாக, தூதரக மற்றும் ராணுவ மட்டங்களில் வழக்கமான பரிமாற்றங்களையும் தொடர்புகளையும் தொடர்ந்து பேணிக் காக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

சீனாவில் நடைபெற உள்ள அடுத்த சிறப்பு பிரதிநிதிகள் கூட்டத்துக்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்காக இரு தரப்பினரும் இணைந்து பணியாற்ற ஒப்புக்கொண்டனர்.

இந்த வருகையின்போது இந்திய வெளியுறவுத்துறை இணைச் செயலாளர் சுஜித் கோஷ், சீன வெளியுறவு அமைச்சகத்தின் ஆசிய விவகாரத் துறை தலைமை இயக்குநர் லியு ஜின்சாங்கைச் சந்தித்துப் பேசினார். மேலும், சீன வெளியுறவுத் துறையின் உதவி அமைச்சர் ஹாங் லெய் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சர்வர் மேம்பாடு பணி காரணமாக மின்நுகர் வோருக்கான உயரழுத்த இணைய சேவை இயங்காது

## மின்வாரியம் அறிவிப்பு

சென்னை: மே.29-

சர்வர் மேம்பாடு பணி காரணமாக மின்நுகர்வோருக்கான உயரழுத்த இணைய சேவை இன்று இயங்காது என மின்வாரியம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தற்போது பயன்பாட்டில் உள்ள உயர் அழுத்த பில்லிங் தரவுத்தளம் மற்றும் சர்வர் அமைப்பு, உயர் அழுத்த மின் நுகர்வோரின் பில் விவரங்கள், மீட்டர் ரீடிங் தகவல்கள், ஆன்லைன் கட்டண சேவைகள் மற்றும் மொபைல் பயன்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட முக்கியமான வருவாய் சார்ந்த கணினி அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் சார்பில், உயர் அழுத்த மின் நுகர்வோருக்கான பில்லிங் சேவை மற்றும் தரவுத்தள அமைப்பை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த சேவையை மேலும் பாதுகாப்பானதாகவும், வேகமானதாகவும் மாற்றும் நோக்கில், பழைய சர்வரிலிருந்து புதிய மேம்பட்ட சர்வருக்கு தரவுத்தள மாற்று பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. புதிய அமைப்பில் ஆரக்கிள் 19 சி போன்ற சமீபத்திய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.தமிழக நிகழ்வுகள்

இத்தகைய மாற்றுப் பணிகள் அரசு விடுமுறை நாளான இன்று (28ம் தேதி) காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, உயர் அழுத்த பில்லிங் நுகர்வோர் போர்ட்டல் தற்காலிகமாக செயல்படாது. இதனால், உயர் அழுத்த மின் நுகர்வோரும், கள அலுவலர்களும் இணையதள சேவைகளை அணுக முடியாது.பொதுமக்கள் மற்றும் உயர் அழுத்த மின் நுகர்வோர் இதனை கருத்தில் கொண்டு, தங்களது பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டு முடித்துக் கொண்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த சேவை மேம்பாட்டு நடவடிக்கை, உயர் அழுத்த மின் நுகர்வோருக்கு எதிர்காலத்தில் வேகமான மற்றும் தடையற்ற சேவைகளை வழங்க உதவும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# கெயில் சாதனை உடைப்பு; சச்சின் பாராட்டு புதிய 'மாஸ்டர் பிளாஸ்டர்' சூர்யவன்ஷி!






சென்னை, மே.29-

தனியொரு வீரர் ஐபிஎல் தொடர்களில் அணியை வெற்றிக்கு இட்டுச் செல்வது ஒன்றும் புதிதல்ல என்றாலும், இந்தப் புதுப்புயல் வைபவ் சூர்யவன்ஷியின் ஹிட்டிங் உண்மையில் பலரையும் விண்ணிலிருந்து வந்த ஒரு புது அவதார கிரிக்கெட் வீரராகவே அவரை நினைக்க வைத்துள்ளது.நேற்று கம்மின்ஸ் முதலில் அவரை 2 பந்துகள் கட்டுப்படுத்தினாலும் அடுத்ததாக கம்மின்ஸ் தனது துல்லிய யார்க்கரில் துளி அளவு பிசகினாலும் பந்து சிக்ஸருக்கு செல்வதுதான் காட்சியாக இருந்தது. அதே போல் ஸ்லோயர் ஒன்களையும் சூர்யவன்ஷி விரைவில் பார்த்து விடுகிறார். அதை அப்படியே நின்று ஒரே தூக்குத் தூக்குகிறார். கம்மின்ஸை ஒரே ஓவரில் 4, 6, 6, 6 என்று விளாசுவதெல்லாம் சாதாரண விஷயமல்ல, அதுவும் 15 வயது சிறுவன் இதைச் செய்ய முடிகிறது என்றால் ஆச்சரியத்தையும் கடந்த அதிசயமாகவே உள்ளது.துல்லியம் கொஞ்சம் தவறினாலும் பந்து மைதானத்திற்கு வெளியே என்றால் எப்படிக் கள வியூகம் அமைப்பது, எங்கே வீசுவது என்ற கேள்விகளை எதிரணிக்கு ஏற்படுத்துபவராக உள்ளார் சூர்யவன்ஷி. அதுவும் கால்களை நோக்கி வீசி கட்டுப்படுத்துகின்றனர் என்பதை விரைவில் கணித்து வலது காலை ஒதுக்கிக் கொண்டு விளாசும் திறமையோடு இல்லாமல் இதனை சீராக ஒவ்வொரு முறையும் செய்ய முடிகிறது என்பது இதுகாறும் கிரிக்கெட் உலகில் காணக்கிடைக்காத அரும்பெரும் திறமை என்றே கூற வேண்டும்.29 பந்துகளில் 12 சிக்ஸர்கள் 5 பவுண்டரிகள் என்றால் 17 பந்துகளில் 92 ரன்களை அவரால் விளாச முடிகிறது என்பதுதான் அவரது உண்மையான ஸ்ட்ரைக் ரேட். சிக்ஸர்களில் கெயில் 2012 சீசனில் 59 சிக்ஸர்களை விளாசி சாதனையை நேற்று வரை வைத்திருந்தார். ஆனால், வைபவ் சூர்யவன்ஷி நேற்று இதை உடைத்தார். அதுவும் 15 வயதில். இந்த ஆட்டத்துக்கு முன்பாக 53 சிச்ஸர்கள் என்று இருந்த சூர்யவன்ஷி, நேற்றைய இன்னிங்ஸிற்குப் பிறகு 65 சிக்ஸர்கள் என்று கெயிலைக் கடந்து உயரம் சென்றுள்ளார். 10 ஓவர்கள் முடிவதற்குள்ளாகவே கெயில் சாதனையை உடைத்து பல படிகள் கடந்து சென்று விட்டார். இத்தனை நாட்களாக இந்திய லெஜண்ட் சச்சின் டெண்டுல்கர், வைபவ் சூர்யவன்ஷி பற்றி எதுவும் கூறவில்லையே என்று காத்திருந்த நமக்கு 'வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம்' போல் சூர்யவன்ஷியை பாராட்டி ட்வீட் செய்துள்ளார் சச்சின் டெண்டுல்கர்:"வைபவ் சூர்யவன்ஷியின் பேட் ஸ்விங் தனித்துவமாக உள்ளது. அதைவிடவும் வியக்கத்தக்கது என்னவென்றால், தன் கால்களை நோக்கி வரும் பந்துகளுக்கு இடம் உருவாக்குவதற்காக, அவர் தனது முன் காலை எவ்வளவு அழகாக நகர்த்துகிறார் என்பதுதான். இந்தச் சுதந்திரம்தான் அவர் அவ்வாறு விளையாட அனுமதிக்கிறது.அந்த ஆட்டம் ஓர் அற்புதமான காட்சி விருந்து என்பதைத் தவிர வேறொன்றுமில்லை!" என்று சச்சின் பாராட்டியுள்ளார்.இந்த ஐபிஎல் தொடரில் 15 ஆட்டங்களில் இதுவரை சூர்யவன்ஷி 680 ரன்களைக் குவித்துள்ளார். ஸ்ட்ரைக் ரேட் 242.85. இவரது ஆட்டத்தைப் பற்றி ஏற்கெனவே ஆஸ்திரேலிய கேப்டனும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் கேப்டனுமான கம்மின்ஸ், 'என்னுடைய புதிய ஃபேவரைட் வீரர் வைபவ்' என்றார். நேற்றைய இன்னிங்ஸைப் பார்த்து, எதாவது செய்து வீரரை வீழ்த்தும் திறன் கொண்ட அவரைப் போன்ற ஒருவரே இப்படிக் கூறுகிறார்: "அவரை வீழ்த்துவதற்கு எந்த ஒரு வாய்ப்பும் இல்லை என்றே தோன்ற ஆரம்பித்து விட்டது." என்று கூறியுள்ளது சூர்யவன்ஷியின் அருமை பெருமைகளை விளக்குவதாக உள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161